**BA/CIR/2019-20/ 02** **07.06.2019**

**வருகைப் பதிவேடு மற்றும் பள்ளி நேரங்களில் மாணவர்களுக்கு அனுமதி கோருபவர் கவனத்திற்கான சுற்றறிக்கை.**

**அன்பார்ந்த பெற்றோர்களுக்கு வணக்கம்,**

சென்ற கல்வியாண்டில் உங்களின் மேலான ஒத்துழைப்புடன் குழந்தைகள் காலதாமதமாக வருதல் என்பது முற்றிலும் தவிர்க்கப்பட்டுவிட்டது. மிக்க நன்றி! அதுபோலவே, இந்த வருடம் வகுப்பு நேரத்தில் பல்வேறு காரணங்களைக்கூறி அனுமதி கேட்டு அழைத்துச்செல்லுதலை முற்றிலுமாகத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம். குழந்தைகள் விடுப்பு எடுக்க நேரிட்டால் கற்றலில் பின்னடைவு நேரிடுகிறது. சில சமயங்களில் விடுப்பு எடுத்து மீண்டும் பள்ளிக்கு வருகை புரிந்த பின், மற்ற மாணவர்களுடன் கற்றலில் சரிவிகித அளவில் ஈடுபட முடியாமல் போகிறது.சிறிது நாட்களாக மாணவர்களின் வருகை நாட்கள் குறைவாக இருக்கும் பட்சத்தில் அவர்களின் படித்தல் மற்றும், செயல்திறன், மதிப்பெண்கள் அனைத்தும் குறைவாகிறது. அதனால் நம்முடைய கடமையாக, அவர்கள் விடுப்பு எடுப்பதைத் தவிர்க்கும் கட்டாயத்திற்கு வழிவகை செய்யவேண்டும்.

பால்சம் பள்ளியானது, மாணவர்களின் சாதனைகளை ஊக்குவித்து வளர்ச்சிப்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. **“காலம் பொன் போன்றது என்பார்கள்”** அதைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு நிமிடமும் மிகவும் பயனுள்ள வகையில் செயல்புரிவதில் பால்சம் பள்ளி சீரியமுறையில் செயலாற்றி வருகிறது. இவ்வேளையில் விடுப்பு விண்ணப்பங்கள் மற்றும் கோரிக்கைகள் அதிகமாக உள்ளது. பெற்றோர்களுக்கு அழுத்தம் திருத்தமாக ஒன்றினைக் குறிப்பிட விரும்புகிறோம். தயவுகூர்ந்து விடுமுறை நாட்களில் மட்டுமே தங்களுக்குத் தேவையானவற்றை பூர்த்தி செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். தவிர்க்கமுடியாத சூழ்நிலையாக இருந்தால் மட்டுமே விடுமுறை வழங்கப்படும்.

பள்ளி விடுமுறை வழங்கும் நாட்களில் பல் மற்றும் கண் பரிசோதனைக்ளுக்கான சிகிச்சைகள், மற்ற காரணங்களுக்காக மருத்துவரிடம் பெறும் நியமனங்களை செய்துகொள்ளலாம். பள்ளி வேலை நாட்களில் இத்தகையக் காரணங்களைத் தவிர்க்கலாம்.

காலை வேளையில் பள்ளிக்குத் தாமதமாக *(8.50)* வந்தால் விடுமுறை என்றே வருகைப் பதிவேட்டில் குறிக்கப்படும். *8.50* மணிநேரத்திற்குள் வருகைப் பதிவேட்டின் காலஅளவு முடிவடைவதால் அதன்பின் வருபவர்களை அனுமதிக்கப்படமாட்டாது. இத்தகைய இடர்பாடுகளைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அதாவது, நாளைய தினத்திலிருந்தே, பள்ளி ஏற்றுக்கொள்ளக்கூடிய தவிர்க்கமுடியாத காரணங்களுக்கு மட்டுமே விடுப்பு அனுமதி தரப்படும். மாணவர்களுக்கு ஏற்கனவே குறைந்த அளவில் வருகைப்பதிவேடு இருக்கும் பட்சத்தில், அவர்களுக்கு விடுப்பு வழங்கப்படமாட்டாது. ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் அதிலும் குறிப்பாக தேர்வு நடைபெறும் நாட்களில் விடுப்பு கண்டிப்பாக வழங்கப்பட மாட்டாது.பள்ளியின் தொடக்க நாள் மற்றும் இறுதி நாட்களிலும் விடுப்பு எடுப்பதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம். ஏனெனில் விடுமுறை வீட்டுப்பாடங்கள் மற்றும் சுற்றறிக்கைகளை மாணவர்கள் பெற்றுக்கொள்ள இயலாமல் போய்விடுகிறது.

பள்ளி நேரத்தில் அனுமதி கேட்கும்பொழுது பள்ளியை சார்ந்த அனைத்து பணிகளும் பாதிப்பிற்குள்ளாகின்றன. இந்த பாதிப்பு தங்கள் குழந்தையின் கற்றல் தொடர்ச்சிக்கு இடையூறாக அமையும் என்பதோடு மட்டுமல்லாமல் அவர்களின் பிறதிறன்களை வளர்த்துக்கொள்வதையும் பாதிக்கும். இதன்மூலம் தன்னம்பிக்கையையும் இழக்கநேரிடும். எனவே, குழந்தைகளின் சிறப்பான எதிர்காலத்தையும், பள்ளியின் செயல்பாடுகளையும் மனதிற்கொண்டு அனுமதிகளையும், சனிக்கிழமைகளில் விடுப்பு எடுத்தலையும், பிற தேவையற்ற விடுப்புகளையும் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம். நன்றி.

இங்ஙனம்,

பள்ளி முதல்வர்.